இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 04.08.2026

# இதுவே தி.மு.க. ஆட்சியில் நடந்திருந்தால்...?

அமைச்சர் சரத்குமார் பவுடர் பயன்படுத்தி மாட்டிக் கொண்டிருக்கிறார். கேட்டால், 'மகளுக்கு மாத்திரையை நசுக்கிக் கொடுத்தேன்' என்கிறார். ஏ.டி.எம்.கார்டு வைத்து மாத்திரையை நசுக்க விஜய் கட்சி ஆட்களால்தான் முடியும் என்பதை தமிழ்நாடு அறிந்தது அன்றுதான். **இப்படி ஒரு அமைச்சர் தி.மு.க. ஆட்சியில் இருந்திருந்தால்...?**

திருவைகுண்டம் எம்.எல்.ஏ. சரவணன் மீது த.வெ.க. கட்சியைச் சேர்ந்த மிக நீண்ட காலம் விஜய் ரசிகையாக இருப்பவரே பாலியல் புகாரைக் கொடுத்துள்ளார். 'இரண்டு பேர் என்னை பாலியல் வன்கொடுமை செய்தார்கள். 'சரவணன் பெயரைச் சொல்லித்தான் அழைத்துச் சென்றார்கள்' என்று சொல்கிறார் அந்தப் பெண். சரவணன் மீது நடவடிக்கை எடுங்கள் என்று அமைச்சர்கள் ஆனந்த், ஆதவ் அர்ஜுனாவிடம் இவர் புகாரும் சொல்லி இருக்கிறார். இறுதியாக த.வெ.க. எடுத்த நடவடிக்கை என்ன தெரியுமா? புகார் கொடுத்த விஜய் ரசிகையை விஜய் கட்சியில் இருந்து தூக்கி விட்டார்கள். கடந்த இரண்டு மாதங்களாக கொலை மிரட்டலுக்கு உள்ளாகி வருகிறார் அந்தப் பெண். **இதுவே தி.மு.க. ஆட்சியில் நடந்திருந்தால்...?**

பழனி முருகன் சொத்தையே ஆட்டை போட்டு விட்டது ஒரு கும்பல். ரூ.100 கோடி சொத்தை ரூ.2 கோடிக்கு தாரை வார்ப்பது அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷுக்குத் தெரியாமல் நடந்திருக்க வாய்ப்பு இல்லை. மீடியாவுக்கு முன்னால் வாயை மெல்லுகிறார் ரமேஷ். 'இது எந்த மாதிரியான சொத்து என்றே தெரியாமல் கிரயம் செய்து கொடுத்துவிட்டார் அதிகாரி' என்கிறார் அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ். 'தெரிந்தே தவறு செய்துள்ள பத்திரப்பதிவு அதிகாரி மீது நடவடிக்கை எடுப்பேன்' என்கிறார் பத்திரப்பதிவு துறை அமைச்சர் லோகேஷ். பக்கத்தில் நின்று பேட்டி கொடுக்கிறவர்களே மாற்றி மாற்றி பேசினார்கள். **இதுவே தி.மு.க. ஆட்சியில் நடந்திருந்தால்...?**

"சும்மா எதை எடுத்தாலும் கோவில் சொத்து, கோவில் சொத்துன்னு சொல்லக் கூடாதுங்க" என்று பேட்டி தருகிறார் அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ். **இப்படி தி.மு.க. ஆட்சியில் அறநிலையத் துறை அமைச்சர் சொல்லி இருந்தால்** தினமும் 'தினமலர்' நாளிதழ் தீப்பறக்கும் கட்டுரைகளைத் தீட்டி இருக்காதா? ரமேஷ்களுக்கு எதுவும் பேச தனி லைசென்ஸ் இருக்கிறதா?

சமூகநலத்துறை அமைச்சர் ஜெகதீஸ்வரியின் 'சொர்ணாக்கா' ஸ்டைல் ஆடியோ தீயாய் பரவி வருகிறது. பக்கத்துத் தொகுதியில் இருக்கும் சொந்தக் கட்சிக்காரரை தனது தொகுதிக்குள் கால் வைக்கக் கூடாது என்று தடைபோடுகிறார் அமைச்சர். 'அவனை தூக்கி வைத்து ஜட்டியோட வைத்து அடித்தே கொன்னுடுவேன். என்னைப் பார்த்தா பைத்தியக்காரி போல் இருக்கா? என் தொகுதிக்குள் சாத்தூர்காரன் ஒருத்தன் காலை வைக்க விடமாட்டேன்' என்று அவர் கொலை மிரட்டல் விடுக்கிறார் மறுமுனையில் பேசுகிறவரிடம். **இதுவே தி.மு.க. ஆட்சியில் நடந்திருந்தால்..?**

'ஏதோ வீடியோ இருப்பதாகச் சொல்லி என்னைத் தொடர்பு கொண்டு சிலர் பணம் கேட்டு மிரட்டுகின்றனர். அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பேன்' என்றும் அமைச்சர் ஜெகதீஸ்வரி பேட்டி அளித்துள்ளார். **இதுவே தி.மு.க. ஆட்சியில் நடந்திருந்தால்..?**

அரசு வழக்கறிஞர் நியமனத்துக்கு பல லட்சம் ரூபாய் லஞ்சம் கேட்டதாக செய்திகள் வெளியானது. இது தொடர்பாக த.வெ.க.வைச் சேர்ந்த விழுப்புரம் மாவட்ட வழக்கறிஞர் அணி இணைச் செயலாளர் ஞானசௌந்தரி வழக்கே போட்டார். 'என்னை அரசு வழக்கறிஞராக நியமிக்க விழுப்புரம் மாவட்டச் செயலாளர் மோகன்ராஜ் என்னிடம் ரூ.5 லட்சம் பணம் கேட்டார். என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னேன். மாற்றுக் கட்சிக்காரரிடம் பணம் வாங்கிக் கொண்டு அவரை நியமித்து விட்டார். இது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன். இந்த வழக்கை வாபஸ் வாங்க வேண்டும் என்றும், மகிளா நீதிமன்றத்தில் பதவி போடுவதாகவும் அவர்கள் பேரம் பேசிய ஆடியோ என்னிடம் உள்ளது. அதையும் வெளியிடுவேன். எனது வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்யவில்லை. உரிய ஆதாரங்களுடன் தாக்கல் செய்யத்தான் சொல்லி இருக்கிறார்கள்' என்று த.வெ.க.வைச் சேர்ந்த ஞானசௌந்தரி பேட்டி தந்தார். இந்த விவகாரத்தில் அமைச்சர்கள் ஆனந்த், நிர்மல்குமார் பெயர் அடிபட்டது. உடனே ஞானசௌந்தரியை த.வெ.க.வில் இருந்து நீக்கி விட்டார்கள். **இதுவே தி.மு.க. ஆட்சியில் நடந்திருந்தால்...?**

அமைச்சர்கள் வெளிநாடு செல்வதாக இருந்தால் ஒன்றிய அரசின் அனுமதியுடன், டிப்ளோமேட்டிக் பாஸ்போர்ட் வைத்துதான் செல்ல வேண்டும். அமைச்சர்கள் ராஜ்மோகனும், கீர்த்தனாவும் சொந்த பாஸ்போர்ட் வைத்து வெளிநாடு சென்று திரும்பி இருக்கிறார்கள். இது குறித்து விளக்கம் அளிக்க ஒன்றிய அரசு இரண்டு அமைச்சர்களுக்கும் நோட்டீஸ் அனுப்பி இருக்கிறது. **இதுவே தி.மு.க. ஆட்சியில் நடந்திருந்தால்..?**

'எனது உயிருக்கு அச்சுறுத்தல் இருக்கிறது' என்று சொல்லி எஸ்.பி.யிடம் மனு கொடுத்துள்ளார் உசிலம்பட்டி த.வெ.க. எம்.எல்.ஏ. விஜய். முதலமைச்சர் விஜய் ஆட்சியில் எம்.எல்.ஏ. விஜய்க்கே பாதுகாப்பு இல்லை. சட்டம் ஒழுங்கின் லட்சணம் இதுதான்.

**இவை தி.மு.க. ஆட்சியில் நடந்திருந்தால் எல்லாச் சேனல்களும் அலறிக் கொண்டே இருந்திருக்கும். சமூகப் போராளிகள் யூ டியூப்களில் வியர்வை வழியவழிய பேட்டிகள் கொடுத்திருப்பார்கள். 'ஐயையோ தமிழ்நாடே' என்ற கூக்குரல் கேட்டிருக்கும். 'ஒன்றிய அரசு இதை எல்லாம் வேடிக்கை பார்ப்பதா?'என்று பலரும் எடுத்துக் கொடுப்பார்கள். ஆனால் இவை அனைத்தும் நடிகர் விஜய் பிலிம் ஆட்சி என்பதால் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள்.**

**விஜய்யின் ஆணவத்துக்கும், தான் செய்வதுதான் சரி என்று நினைப்பதற்கும் காரணம், மீடியாக்களின் மிக மோசமான மவுனம்தான்.**

●●

## நம்பிக்கையை விற்று, பதவியை வாங்கும் நச்சுப் பாம்புகள் – தமிழ்நாட்டுக்கு வந்துவிட்டு

# மேகதாது அணைக்கு எதிர்ப்புத் தெரிவிக்காத துரோகிகள்!

## தயாநிதிமாறன் எம்.பி. கடும் விமர்சனம்!

சென்னை, ஆக. 4 -

நாடாளுமன்ற மக்களவை கழகக்குழு துணைத் தலைவர் தயாநிதி மாறன் தமது சமூக வலைதளப் பதிவில் "நம்பிக்கையை விற்று, பதவியை வாங்கும் நச்சுப்பாம்புகள் - மேகதாது அணைக்கு எதிர்ப்புத் தெரிவிக்காத துரோகிகள்" என்று விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

**நம்பிக்கையை விற்று, பதவியை வாங்கும் நச்சுப்பாம்புகள்!**

**தமிழ்நாட்டுக்கு வந்துவிட்டு CauveryRights குறித்து பேசாமல் இருப்பவர்கள் துரோகிகள்!**



**காவிரியில் தமிழ்நாட்டின் உரிமையைக் காவு வாங்கும் Mekedatu Damக்கு எதிர்ப்புத் தெரிவிக்காதவர்கள் துரோகிகள்!**

**NEET தேர்வு முறையையே ரத்து செய்ய வேண்டும் என்று வலியுறுத்தாமல், தேர்வில் முறைகேடு நடப்பதாக மட்டும் பேசுகிறவர்கள் துரோகிகள்!**

**பா.ஜ.க.வின் குதிரைப் பேரங்களைக் கண்டிக்கிறவர்கள், த.வெ.க.வின் அருவருப்பான குதிரைப் பேரங்களைக் கண்டு கொள்ளாமல் இருப்பதும் துரோகத்தின் தொடர்ச்சியே!**

**ஆட்சியையும் அமைச்சர்களையும் விமர்சித்து Xஇல் பதிவிட்டால்கூட கைது செய்யும் பாசிச த.வெ.க. ஆட்சியைக் கண்டிக்காததும் துரோகமே!**

**டெல்லி போலீசுக்குச் சற்றும் குறைவில்லாமல், தமிழ்நாடு போலீசும் NEETProtest மாணவர்கள் மீது அராஜகத் தாக்குதலை நடத்தியதைக் கண்டிக்காததும் துரோகத்தின் உச்சமே!**

**தமிழ்நாட்டுக்கு வந்து ஒருவர் அரசியல் பாடம் எடுத்ததைப் படித்தபோது, இதெல்லாம் வரிசையாக நினைவுக்கு வந்தது!**

**அப்பப்பா... எவ்வளவு துரோகங்கள்!**

இவ்வாறு தயாநிதி மாறன் எம்.பி. தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

## தி.மு.கழக ஆட்சியில் அதிகரித்த தொழில் முதலீடுகள்!

# 4 மாநில புதிய முதல்வர்களுடனான ஒப்பீட்டில் பின் தங்கிய விஜய்!

## தொழில் முதலீட்டில் பின்னடைவை சந்திக்கும் தமிழ்நாடு!

**சென்னை, ஆக. 4 -**

**த.வெ.க. ஆட்சியில் தொழில் முதலீட்டில் தமிழ்நாடு பின்னடைவை சந்தித்துள்ளதுடன்,4 மாநில புதிய முதலமைச்சர்கள் ஒப்பீட்டில், முதலமைச்சர் விஜய் பின் தங்கியுள்ளது தரவுகளின் மூலம் வெட்டவெளிச்சமாகியுள்ளது.**

கடந்த தி.மு.க. ஆட்சியில், 2030ம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை ஒரு லட்சம் கோடி பொருளாதாரமாக மாற்ற வேண்டும் என்ற இலக்கை நோக்கி, அப்போதைய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தீவிரமாக செயல்பட்டு வந்தார். தி.மு.க. ஆட்சியில் தொழில் முதலீடுகள் திட்டமிட்டபடி குவியத் தொடங்க, தமிழ்நாடு இலக்கை நோக்கி பயணித்தது.

ஆனால், புதிதாக பொறுப்பேற்ற விஜய் தலைமையிலான த.வெ.க. அரசில், தமிழ்நாட்டின் தொழில் முதலீடுகள் சரியத் தொடங்கி இருப்பது ஆங்கில நாளிதழ் வெளியிட்டுள்ள செய்தியில் வெட்டவெளிச்சமாகியுள்ளது.

கர்நாடகா, கேரளா, மேற்கு வங்கம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் புதிய முதலமைச்சர்கள் பதவியேற்றதைத் தொடர்ந்து, முதல் காலாண்டில் 4 மாநில தொழில் முதலீடுகளில் தமிழ்நாடு பின்னடைவை சந்தித்துள்ளதாகவும், மற்ற 3 மாநிலங்களில் முன்மொழியப்பட்ட முதலீடுகள் கணிசமாக அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான கடந்த ஆட்சியில், 26வது நிதியாண்டின் 4வது காலாண்டில், மொத்த தொழில் முதலீடு 76 ஆயிரம் கோடியாக இருந்த நிலையில், விஜய் ஆட்சியில் முதல் காலாண்டில், தமிழ்நாட்டு தொழில் முதலீட்டில் மைனஸ் ஆக குறைந்துள்ளது வெட்டவெளிச்சமாகியுள்ளது. விஜய் தலைமையிலான த.வெ.க. ஆட்சியில் முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு பின்னடைவை சந்தித்துள்ளதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கரூரில் போக்குவரத்து மாற்றம் என்ற பெயரில்

# பொதுமக்கள் - தொழிலாளர்களை அலைக்கழிக்கும் சோபா மாடல் அரசு!

*கரூர், ஆக. 4 -*

*கரூரில் போக்குவரத்து மாற்றம் என்ற பெயரில் ஆயிரக்கணக்கான பொதுமக்களையும், தொழிலாளர்களையும் அலைக்கழிக்கும் சோபா மாடல் அரசின் கோமாளித்தனத்திற்கு பொதுமக்கள் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.*

*30 ஆண்டுகளுக்கும் மேலாக கரூரில் புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கையை நிறைவேற்றியது திராவிட மாடல் அரசு. வெற்று வாக்குறுதியாக இருந்ததை அப்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கரூர் திருமாநிலையூர் பகுதியில் புதிய பேருந்து நிலையத்திற்கு அனுமதி வழங்கி அடிக்கல் நாட்டி நனவாக்கினார்கள். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக புதிய பேருந்து நிலையத்தை தொடங்கி வைத்தார்கள். முன்னாள் அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி, அ.தி.மு.க. மாவட்டச் செயலாளராக இருந்தவர் காழ்ப்புணர்ச்சி காரணமாக புதிய பேருந்து நிலையம் வரவிடாமல் தடுத்ததை, உச்சநீதிமன்றம் வரை சென்று சட்டப்போராட்டம் நடத்தி வென்று காட்டினார்.*

*முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி முயற்சியால் கொண்டு வரப்பட்ட புதிய பேருந்து நிலையத்தை பொதுமக்கள் பயன்படுத்துவதை, பொறுத்துக் கொள்ள முடியாமல் சோபா மாடல் ஆட்சியினர் பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தி வருகின்றனர். அரசு நிகழ்ச்சிகளில் முந்தைய ஆட்சியின் பெயர்களை மறைப்பது. திட்டங்களை மறைப்பது, புகைப்படங்களை அகற்றுவது போன்ற செயலில் ஈடுபட்டு வந்த த.வெ.க. ஆட்சியின் நிர்வாகம் தற்போது பயணிகளை அலைக்கழிக்கும் போக்கில் ஈடுபட்டுள்ளது.*

*அனைத்து புறநகர் பேருந்துகளும் புதிய பஸ் நிலையத்தில் இருந்து தான் இயக்கப்படும் என்று ஒரு அறிவிப்பை மாவட்ட நிர்வாகம் வெளியிட்டு செயல்படுத்தி வருகிறது. யாரையும் மதிக்காமல், அனுபவம் உள்ளவர்கள் கருத்துக்களையும் கேட்காமல், தான்தோன்றித்தனமாக மாவட்ட நிர்வாகமும், போக்குவரத்து காவல் துறை நிர்வாகமும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.*

*இந்நிலையில், கரூரில் இயங்கி வரும் டவுன் பஸ்கள் யாவும் இன்னும் சில நாட்களில் புதிய பஸ் நிலையத்திலிருந்துதான் இயங்கும், திரும்பி வரும்போது சுக்காலியூர் வழியில் செல்லும் என்றும் இணையதளங்களில் தகவல்கள் பரவின.*

*இந்த முறையை அமல்படுத்தினால், கரூர் நகருக்குள் நூற்றுக்கணக்கான ஜவுளி உற்பத்தி, கொசு வலை பேருந்து கூண்டு கட்டும் நிறுவனங்களுக்கு வரும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், ஜவுளிக்கடை, நகைக்கடை, காய்கனி மார்க்கெட், சூப்பர் மார்கெட், சினிமா தியேட்டர்கள், மருத்துவமனைகளுக்கு வருவோர், கூலித் தொழிவாளர்கள், ரயில் நிலையத்திற்கு வந்து செல்வோர் உட்பட லட்சம் பேர் புதிய பேருந்து நிலையத்திற்கு வெளியூரில் இருந்து வந்து, அங்கிருந்து மீண்டும் ஒரு பேருந்து பிடித்து பழைய பேருந்து நிலையத்துக்கு வந்து அவரவர் பகுதிக்கு செல்ல வேண்டிய அவல நிலை உருவாகும்.*

*ஈரோடு, கோவை, சேலம், மதுரை போன்ற நகரங்களுக்கு செல்லும் புறநகர் பஸ்கள் புதிய பஸ் நிலையத்திலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு கரூரில் உள்ள பழைய பஸ் நிலையத்திலும் பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்று வந்த நிலைமையும் சோபா மாடல் அரசு மாற்றிவிட்டது. பயணிகள் பெரும் அவதிப்பட்டு இருக்கும்போது, இப்போது அறிவித்துள்ள கோமாளித்தன அறிவிப்பால் மேலும் அலைக்கழிக்கப்படுவார்கள் என கடும் கண்டனங்கள் எழுந்தன.*

*எதற்கெடுத்தாலும் முந்தைய அரசை குறை கூறிக்கொண்டு, ரீல்ஸ் மோகத்தில் இருக்கும் கையாலாகாத, த.வெ.க. அரசின் நடவடிக்கையால், இரவு நேரங்களில் பஸ் வசதி இல்லாமல் பல மணி நேரம் காத்திருந்து புதிய பஸ் நிலையம் சென்று, தங்கள் ஊருக்கான பஸ்களை பிடிக்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர்.*

*திராவிட மாடல் ஆட்சியில் இருந்ததைப் போல, இரவு 8 மணிக்கு மேல் அதிகாலை 5 மணி வரை சேலம், ஈரோடு, கோவை செல்லும் பஸ்கள் யாவும் கரூர் பழைய பஸ் நிலையத்திற்கு வந்து சென்றால் வசதியாக இருக்கும் என்று பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.*

*தனியார் டவுன் பஸ் உரிமையாளர்கள் சிலரிடம் கேட்டபோது:*

*டவுன் பஸ்கள் 30 கி.மீ. தூரம் மட்டும் செல்ல அனுமதி உண்டு. புதிய வழித்தடத்தில் டவுன் பஸ்களை இயக்கினால் மேலும் 10 கி.மீ. தூரம் கூடுதலாகும். நேரத்தை சரியாக கடைப்பிடிக்க முடியாத நிலை ஏற்படும். கரூர் வாங்கப்பாளையம், வெங்கமேடு உட்பட பல பஸ் நிறுத்தங்களில் பயணிகளை ஏற்ற முடியாமல் போகும். ஏற்கனவே, பெட்ரோல், டீசல் விலை உயர்வினால் டவுன் பஸ்கள் நஷ்டத்தில் இயங்குகின்றன என்றனர்.*

*பொதுமக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு எழுந்த பிறகு தற்போது இந்தத் திட்டம் யோசனையில் தான் உள்ளது என மாவட்ட நிர்வாகம் தரப்பில் ஒரு செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இனி யாவது ஆளுங்கட்சி அரசியல் நோக்கத்தை கைவிட்டு விட்டு, யாரையும் மதிக்காத போக்கினை மாற்றிக்கொண்டு, மக்கள் பிரதிநிதிகள், அனைத்து தரப்பினரையும் கலந்து ஆலோசித்து, மாவட்ட நிர்வாக மும் காவல் துறை நிர்வாகமும் எந்த முடிவும் எடுக்க வேண்டும் என பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*



வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர்ஆனந்த் சிறப்புரை ஆற்றினார். உடன் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.